**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மைச் சட்டம் 2005 – அரசு / தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்பள்ளிகள் தேர்வுகள் நடத்த அனுமதி – நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) – வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே 4)த்துறை**

**அரசாணை (நிலை) எண். 784** **நாள் 21.12.2020**

**சார்வரி, மார்கழி 6**
**திருவள்ளுவராண்டு 2051**

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.543, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4)த்துறை நாள் 1.10.2020
2. அரசாணை (நிலை) எண்.673, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.4)த்துறை நாள் 30.11.2020

*** *** ***

**ஆணை:-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 05.10.2020 முதல் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் இதர திறன் பயிற்சி வகுப்புகள் திறக்க அனுமதி வழங்கி நிலையான வழிகாட்டி நெறிமுறைகள் (Standard Operating Procedures) வெளியிடப்பட்டன.

2. இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அவர்கள் அரசு / தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பள்ளிகளில் பயிலும் பயிற்சியாளர்களின் நலன் கருதி, நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை (SOP) பின்பற்றி அப்பயிற்சியாளர்களுக்கான தேர்வுகளை நடத்துவதற்கான அனுமதியும், அனுமதி பெற்ற பின் 15 தினங்களுக்கு பிறகு அத்தேர்வுகளுக்கான தேதியினை இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அவர்கள் நிர்ணயித்துக்கொள்ள அனுமதியும் அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. அரசின் தீவிர பரிசீலனைக்குப் பின், அரசு / தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பள்ளிகளில் பயிலும் பயிற்சியாளர்களின் நலன் கருதி அப்பயிற்சி யாளர்களுக்கான தேர்வுகளை நடத்துவதற்கான அனுமதி அளித்து தேர்வு மையங்களுக்கான நிலையான வழிகாட்டு நடைமுறைகளை (SOP) இணைப்பில் உள்ளவாறு அரசு வெளியிடுகிறது. மேலும் அத்தேர்வுகளுக்கான தேதியினை வெளியிட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. சண்முகம்**
**அரசு தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்,
சென்னை 600 005

கூடுதல் தலைமைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை
சென்னை 09
இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை 32
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
முதுநிலை தனிச் செயலாளர், தலைமைச்செயலாளர் அலுவலகம், சென்னை 9

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

21/12/2021

பிரிவு அலுவலர்

# இணைப்பு

## தேர்வு மையங்களுக்கான வரைவு நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (Standard Operating Procedure)

**பொது :**

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிதுறை, பயிற்சி பிரிவின் கீழ் அரசு / தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது நடைபெறவுள்ள தேர்வு நாட்களில் கொரோனா நோய்த்தொற்று பரவலைத் தடுக்க கீழ்க்கண்ட முன் எச்சரிக்கை / நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**தேர்வுமையத்தைபராமரிக்கும் வழிமுறைகள்:**

1. தேர்வு அறைகளை தேர்வு நடைபெறும் முன்னரும் பின்னரும் ஒரு விழுக்காடு சோடியம் ஹைப்போ குளோரைட் திரவம் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.
2. கழிவறைகள், கை கழுவும் இடங்கள் உட்பட அனைத்து இடங்களையும் சுத்தமாக பராமரிக்க வேண்டும்.
3. தேர்வு அறையினுள் அனைத்து இடங்களிலும் காற்றோட்டத்தினை உறுதி செய்ய வேண்டும்.
4. தேர்வுமையத்திற்குள் பாதுகாப்பான குடிநீருக்கான போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.
5. பயிற்சியாளர்கள் மற்றும் பணியாளர்களை சோதிக்க போதுமான அளவு காய்ச்சல் பரிசோதனை கருவிகள், சுத்தம் செய்யும் திரவங்கள், முகக் கவசங்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
6. தேர்வுமைய வளாகத்திலும், வாகன நிறுத்துமிடங்களிலும் கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு சமூக இடைவெளியை கடைப்பிடிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.
7. கட்டுப்பாட்டு மண்டலத்திற்கு வெளியே இருக்கும் தேர்வுமையங்கள் மட்டுமே செயல்பட அனுமதிக்கப்படும். கட்டுப்பாட்டு மண்டலங்களிலிருக்கும் பணியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் தேர்வறைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**தேர்வுமைய நுழைவாயில்:**

1. தேர்வு எழுதவுள்ள பயிற்சியாளர்கள் இடையே நுழைவாயிலில் 6அடி இடைவெளியுடன் நுழைய அனுமதிக்க வேண்டும்.
2. தேர்வெழுதவுள்ள அனைத்து பயிற்சியாளர்களும் தேர்வுமைய வளாகத்தினுள் நுழையும் போதே கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.
3. நுழைவாயிலில் பயிற்சியாளர்களின் பயன்பாட்டிற்காக கைகழுவும் கிருமிநாசினி திரவம் அல்லது சோப்பு மற்றும் தண்ணீர் வைத்திருக்க வேண்டும்.
4. பயிற்சியாளர்களின் உடல் வெப்பநிலையினை சோதனை செய்ய வெப்பநிலை கண்காணிப்பு கருவியை பயன்படுத்தி நுழைவாயிலில் சோதனை செய்யப்பட வேண்டும்.

5. கொரோனா தொற்று பரவாமல் இருக்க செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை பற்றி பயிற்சியாளர்கள் / பணியாளர்கள் தெரிவிக்கும் வகையில் சுவரொட்டிகள், பதாகைகளை தேர்வு மைய வளாகத்தின் நுழைவாயிலில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.
6. கொரோனா தொற்று அறிகுறி உள்ள பயிற்சியாளர்களை தேர்வுமையத்தினுள் அனுமதிக்க கூடாது. அவர்களை உரிய மருத்துவ பரிசோதனைக்காக உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனை அல்லது மாநில/மாவட்ட உதவி எண்ணை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க வேண்டும்.
7. தேர்வுமைய வளாகத்தினுள் எச்சில் துப்புவது கண்டிப்பாக தடை செய்யப்பட வேண்டும்.

<u>**தேர்வு அறை:**</u>

1. தேர்வு அறையில் பயிற்சியாளர்கள் 6அடி இடைவெளியில் அமர வைக்கப்பட வேண்டும்.
2. தேர்வு அறை பணியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். வினாத்தாட்கள், விடைத்தாட்கள் வழங்கும் முன்னும் பின்னும் கை சுத்திகரிப்பானை பயன் படுத்த வேண்டும்.
3. பயிற்சியாளர்கள் தங்களது பொருட்களை மற்ற பயிற்சியாளர்களிடம் பகிர்ந்து கொள்ளக் அனுமதிக்கக் கூடாது.
4. தேர்வு எழுதுவதற்கு முன்னரும் தேர்வு முடிவுற்ற பின்னரும் பயிற்சியாளர்கள் சமூக இடைவெளியுடன் நிதானமாக நுழைய/வெளியேற அறிவுறுத்த வேண்டும்.
5. தேர்வு அறையில் வினாத்தாட்கள்/விடைத்தாட்கள் வழங்கும் போது எச்சில் தொட்டு எண்ணி வழங்குவதை தவிர்க்க வேண்டும்.

<u>**பயிற்சியாளர்களுக்கான வழிமுறைகள்:**</u>

1. பயிற்சியாளர்கள் தேர்வுமைய வளாகத்தினுள்ள எப்பொழுதும் கட்டாயம் முகக்கவசம் அணிவதோடு பொது இடங்களில் குறைந்தபட்சம் 6அடி இடைவெளியை பின்பற்ற வேண்டும்.
2. தேர்வுமைய வளாகத்தில் நுழையும் முன்னர் தங்கள்கைகளை சோப்பு அல்லது கிருமிநாசினி திரவம் கொண்டு கழுவ வேண்டும்.
3. தும்மும் போதும், இருமும் போதும் கைக்குட்டைகளை பயன்படுத்த வேண்டும்.
4. தேர்வு அறையினுள் பயிற்சியாளர்கள் தங்களது பொருட்களை மற்ற பயிற்சியாளர்களிடம் பகிர்ந்து கொள்ளக் அனுமதிக்கக் கூடாது.
5. தேர்வு எழுதுவதற்கு முன்னரும் தேர்வு முடிவுற்ற பின்னரும் பயிற்சியாளர்கள் சமூகஇடைவெளியுடன் நிதானமாக நுழைய/வெளியேற அறிவுறுத்த வேண்டும்.
6. பயிற்சியாளர்கள் தேர்வு அறையினுள் பைகள், புத்தகங்கள், கைபேசி மற்றும் மின்சாதன பொருட்களை எடுத்து செல்லக் கூடாது.

<u>**தேர்வுமைய பணியாளர்களுக்கான வழிமுறைகள்:**</u>

1. தேர்வுமைய பணியாளர்கள் கண்டிப்பாக முகக் கவசம் அணிவதோடு பொது இடங்களில் குறைந்தபட்சம் 6அடி இடைவெளியை பின்பற்ற வேண்டும்.

2. தும்மும் போதும், இருமும் போதும் கைக்குட்டைகளை பயன்படுத்த வேண்டும்.
3. பணியாளர்களுக்கு தினமும் காய்ச்சல் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. ஆரோக்ய சேது செயலியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்த அனைத்து பணியாளர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.
5. பணியாளர்கள், பயிற்சியாளர்களின் உடல்வெப்பநிலையை சோதித்த பின்னரே பயிற்சியாளர்களை தேர்வுமைய வளாகத்தினுள் அனுமதிக்க வேண்டும்.
6. பயிற்சியாளர்கள் கொரோனா தடுப்பு வழிமுறைகளை பின்பற்றி நடக்கின்றனரா என்பதை பணியாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

**<u>தேர்வுமையத் தலைவர்களுக்கான வழிமுறைகள்:</u>**

1. பயிற்சியாளர்கள் மற்றும் பணியாளர்களை சோதிக்க போதுமான அளவு காய்ச்சல் பரிசோதனை கருவிகள், சுத்தம் செய்யும் திரவங்கள், முகக் கவசங்கள் இருப்பதை தேர்வுமையத் தலைவர் உறுதிசெய்ய வேண்டும்.
2. தேர்வுமையத் தலைவர் கொரொனா தொற்று பரவாமல் இருக்க செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை பற்றி பயிற்சியாளர்களுக்கு தெரிவிக்கும் வகையில் சுவரொட்டிகளை தேர்வுமைய வளாகத்தின் நுழைவாயிலில் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
3. தேர்வுமையத் தலைவர் தேர்வுமைய வளாகம், கழிவறைகள், கை கழுவும் இடங்கள் மற்றும் தேர்வுஅறைகள் சுத்தமாக உள்ளதா என உறுதிப்படுத்த வேண்டும்.
4. தேர்வுமையத்திற்குள் பாதுகாப்பான குடிநீருக்கான போதுமான ஏற்பாடுகள் இருப்பதை தேர்வுமையத் தலைவர் உறுதிப்படுத்த வேண்டும்.
5. தேர்வுஅறை பணியாளர்கள்மற்றும் பயிற்சியாளர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும். வினாத்தாட்கள், விடைத்தாட்கள் வழங்கும் முன்னும் பின்னும் கை சுத்திகரிப்பானை பயன் படுத்துவதை தேர்வுமையத் தலைவர் உறுதிப்படுத்த வேண்டும்.
6. பயிற்சியாளர்கள் / பணியாளர்கள் விட்டுச் செல்லும் முகக்கவசங்கள் மற்றும் கையுறைகளை முறையாக அப்புறப்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும்.
7. நோய்தொற்றிற்கான வாய்ப்புகள் அதிகமுள்ள உள்ள அனைத்து ஊழியர்களும் (வயது முதிர்ந்த ஊழியர்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் ஏற்கனவே ஏதேனும் நோய்க்காக மருந்து எடுத்து கொண்டிருக்கும் ஊழியர்கள்) தேர்வுப் பணியில் ஈடுபட அனுமதிக்கக்கூடாது.
8. அனைத்து தேர்வு கண்காணிப்பாளர்கள் / மேற்பார்வையாளர்கள் விவரங்களை எதிர்கால தேவைக்காகவும் தொடர் கண்காணிப்பிற்காகவும் பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
9. COVID 19 சூழலில் நடத்தை நெறிமுறைகள் குறித்து பணியாளர்களுக்கு விளக்க வேண்டும்.

**க. சண்முகம்**
**அரசு தலைமைச் செயலாளர்.**

**/உண்மை நகல்/**

**பிரிவு அலுவலர்.**

**திருக்கோயில்களில் பின்பற்றப்படும் நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (Standard Operating Procedure)**

i. திருக்கோயில்களில் பக்தர்கள் தரிசனம் அந்தந்த திருக்கோயில்கள் பழக்க வழக்கப்படி நடை சாற்றும் வரை அனுமதிக்கலாம்.

ii. திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அர்ச்சகர்கள் நேரடியாக குங்குமம் / மஞ்சள் /விபூதி / பூ மற்றும் இதர பிரசாதங்களை வழங்க அனுமதிக்கலாம். சமூக இடைவெளியைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். முகக் கவசம் கண்டிப்பாக அணிய வேண்டும்.

iii. 100 ச.மீ அல்லது 1075 சதுர அடிக்கு 40க்கும் மேற்பட்ட பக்தர்கள் அனுமதிக்கப் படக்கூடாது.

iv. அர்ச்சனைக்காக பக்தர்கள் தேங்காய், பூ, பழம் ஆகியவற்றை திருக்கோயிலுக்கு கொண்டு வர அனுமதிக்கலாம்.

v. பூஜை மற்றும் அபிஷேகம் நடைபெறும் போது பக்தர்கள் (உபயதாரர்கள் உட்பட) சமூக இடைவெளி மற்றும் முகக் கவசத்துடன் உள்ளே உட்கார்ந்து பார்வையிட அனுமதிக்கலாம்.

vi. திருவிழாக்கள்/உற்சவங்கள்/திருவீதி உலாக்கள் போன்ற வைபவங்கள் நடக்கும் இடங்களின் மொத்த கொள்ளளவில் 50 சதவிகிதம் பக்தர்கள் மட்டும் பங்கேற்பதை அனுமதிக்க வேண்டும். சமூக இடைவெளி கடைபிடித்து முகக் கவசத்துடன் பங்கேற்பதை அனுமதிக்கலாம்.

vii. திருக்கோயில்களில் உள்ள திருக்குளங்களைப் பொருத்தவரையில், பல நபர்கள் ஒரு நேரத்தில், அந்த ஒரே குளத்தில் நீராட வாய்ப்பு உள்ளதால், நோய்த் தொற்றும் அபாயம் அதிகம் உள்ளது. எனவே இதற்கான தடை தொடரும். வழிபாட்டுத் தலங்களில், குறிப்பாக திருக்கோயில்களில் தீர்த்தமாடுதலைப் பொருத்தவரைக்கும், கோயில் திருக் குளங்களுக்குச் செல்லாமல், கிணற்றிலோ அல்லது கடலிலோ சமூக இடை வெளியைக் கடைப்பிடித்து தீர்த்தம் ஆடுவதை அனுமதிக்கலாம். எடுத்துக்காட்டாக, இராமேஸ்வரம் போன்ற திருக்கோயில்களில், தனித்தனியே கிணறுகளில் தீர்த்தமாடுவது அனுமதிக்கப்படுகிறது. அதே வேளையில், பல நபர்களை ஒருங்கே நிற்க வைத்து தண்ணீர் ஊற்றுவதை அனுமதிக்ககூடாது.

viii. திருக்கோயில் அன்னதானம் எடுத்துச் செல்லும் வகையில் பொட்டலங்களாக வழங்கப்பட வேண்டும். பிரசாதக் கடைகளில் விற்பனை செய்யப்படும் பிரசாதங்களை பக்தர்கள் திருக்கோயில் வளாகத்தில் சமூக இடைவெளியுடன் அமர்ந்து உண்ண அனுமதிக்கலாம். பிரசாதக் கடைகளுக்கு செல்ல தனிவரிசை அமைப்பு சமூக இடைவெளியுடன் இருக்குமாறு அமைக்க வேண்டும்.

ix. தற்பொழுது அரசு கூடுதல் தளர்வுகள் அறிவித்துள்ளபடி, கோவிட்–19 தொற்று பரவலுக்கு முன் திருக்கோயில்களில் எத்தனை திருமணங்கள் நடத்த அனுமதிக்கப்பட்டதோ, அதில் 50 சதவிகிதம் திருமணங்களை மட்டும் இயல்பு நிலை திரும்பும் வரை நடத்த அனுமதிக்கலாம். திருக்கோயில்களில் திருமணங்கள் முன்னரே பதிவு செய்து, அதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நேரம் மற்றும் இடத்தில் மட்டுமே நடத்தப்பட வேண்டும். ஒரு திருமணத்திற்கு 100 நபர்களை மட்டும் (இரு தரப்பிலும்) அனுமதித்து சமூக இடைவெளியைக் கடைபிடிப்பதை உறுதி செய்ய வேண்டும்.

x. மேலும், தற்போது அமலில் உள்ள தளர்வுகளின்படி, பிரார்த்தனை நிமித்தம் பக்தர்கள் திருக்கோயில்களில் மேற்கொள்ள விரும்பும் சிறப்பு பரிகார பூசைகள், யாகங்கள், சஷ்டியப்தபூர்த்தி, காது குத்துதல், திருமண நிச்சயதார்த்தம், பீமரதசாந்தி, சதாபிஷேகம் போன்ற சடங்குகளை அந்தந்த திருக்கோயில்களின் பழக்க வழக்கப்படி, சமூக இடைவெளி மற்றும் முகக் கவசத்துடன் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

xi. திருக்கோயில் நிர்வாகமும் மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்தும் பெருந்திருவிழாக்களான கந்த சஷ்டி, கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி, தைப்பூசம், அமாவாசை, ஊஞ்சல் உற்சவம் போன்ற பக்தர்கள் பெருமளவில் கூடும் பெருந்திருவிழாக்களை மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து, ஆட்சியரின் வழிகாட்டுதல்களின்படி வைபவங்கள் நடக்கும் இடங்களின் மொத்த கொள்ளளவில் 50 சதவிகிதம் பக்தர்களுக்கு மிகாமல் நடத்த அனுமதிக்கலாம்.

**க. சண்முகம்**
**அரசு தலைமைச் செயலாளர்.**

**/உண்மை நகல்/**

21/12/2020

பிரிவு அலுவலர்.